பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16-4-2007 (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

74. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

75. மானியக் கோரிக்கை எண் *33*-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2007-2008.* (தமிழ், ஆங்கிலம்)

76. 2006-2007 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

77. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2007-2008.* (தமிழ்)

78. 2006-2007 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)

79. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2007-2008.* (தமிழ்)

80. 2006-2007 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம். (தமிழ்)